ஏறாடி இராஜாக்கள் யார்?

சென்ற இதழ் கதம்பத்தில் 'வலங்கையன் வாள்' தொடர் கதையில் ஏறாடி இராஜாக்களைப்பற்றிய செய்தியை அடிக்குறிப்பில் கண்டேன்.

'ஏறாள நாட்டு வாழ்க்கை 'என்று பல கல்வெட்டுகளில் வருகிறது. இந்த ஏறாள நாடு என்பது வள்ளுவ நாட்டுக்கு மேற்கே அதாவது இன்றைய மலப்புறம் வட்டத்தின் ஒரு பகுதியாகும். இது கோழிக்கோட்டிற்கு தென்புறம் இருந்திருக்க வேண்டும். ஏறாடிமார் என்பவர்கள் வாழ்ந்த பகுதியே இந்த ஏறாள நாடு. சென்னைப் பல்கலைக் கழக 'கீழ்த் திசை சுவடிகள் நூலகத்தின் ' 'கேரளதேச வரலாறு 'என்ற வெளியீட்டில் ஏறாடிமார் பற்றிய செய்தி வருகிறது. **'மானீச்சன் விக்கிரமனான வீரான்துறைக் கோன் முதலிய ஏறாடி மாரும் '**என்ற குறிப்பினைக் காணலாம் ஏறாடி, ஏறாளநாடு, ஏறாலி இவையெல்லாம் ஏறாண் முல்லை என்று சங்க இலக்கியங்களில் வரும் வாகைத் திணையோடு தொடர்புடையதாகும். ஏறாளன் என்றால் ஆண் மக்களில் ஏறு போன்றவன் என்று பொருள். சிங்க ஏறு, அடலேறு என்று வீரர்களை ஒப்பிட்டுச் சொல்வது மரபு. இதுவே மலையாளத்தில் ஏறாடி என்று வழங்கப்பட்டது, கோழிக்கோடு பகுதியில் 'ஏறாலி'என்று குடும்பப் பெயர் கொண்டவர்கள் இன்றும் இருக்கின்றனர்.

சொல்லப் போனால் ' எர்ணாகுளம் 'என்ற பெயர் கூட இதிலிருந்து வந்ததுதான். எர்ணாகுளம் என்பதை 'ஏறாண்புரம்'என்றே கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. ஈரோட்டிற்கு அருகிலிருக்கும் சர்க்கார் பெரியபாளையம் என்ற ஊரிலிருக்கும் வணிகக் கல்வெட்டு ஒன்றில் **'மலை மண்டலத்து ஏறாண்புரத்து**.....' இன்னார் என்று வருகிறது. திருமழபாடி கல்வெட்டிலும் ஏறாண்புரம் என்ற ஊர் பெயர் வருகிறது. மலை மண்டலத்து ஏறாண்புரம் என்றால் அது ஏறாண்புரம், ஏறாண்குளம் என்று மருவி எர்ணாகுளம் ஆகியிருக்க வேண்டும். வணிக முக்கியத்துவம் பெற்ற 'ஏறாண்புரம் 'என்ற ஒரு ஊர் முற்றிலும் அழிந்து போயிருப்பதற்கும் வாய்ப்பில்லை. இன்றும் கொச்சி-எர்ணாகுளம் என்பவை முக்கியமான வணிகத் தலங்களாகவே இருப்பது இதற்குச் சான்று. மிகப் பழங்காலத்து யூதச் செப்பேடுகள், கிடைப்பதோடு யூத வழிபாட்டு ஜெப ஆலயம் (SYNAGOGUE) இங்கு அமைந்திருப்பது இந்நகரங்களின் பண்டைய வணிக முக்கியத்துவத்தைப் பறை சாற்றுகின்றது.

'திருவிதாங்கூர் ஸ்டேட் மானுவல் ' என்ற நூலில் நாகமய்யா திருவிதாங்கூர் சமஸ்தானத்து ஜாதிகளைப் பற்றி சொல்லும் போது 'சாமந்தர்'என்ற ஒரு சாதியினரைப் பற்றி குறிப்பிடுகிறார். 'அவர்கள் பூர்வீக சத்திரியர்கள்தான். பரசுராமனுக்குப் பயந்து தங்கள் சத்திரிய குலத்துக்குரிய முறைமைகளை இவர்கள் விட்டு விட்டதால் நாயர்கள் தங்களை சாமந்த சத்திரியர்கள் என்று உரிமை பாராட்டுவதாக இவர்கள் கூறுகின்றனர்' என்று எழுதுகிறார். இவர்கள் நாயர்களை விட உயர்வானவர்களாகக் கருதப்படுகின்றனர். அடியோடி, நெடுங்காடி, ஏறாடி என்று அழைக்கப்படும் இந்தச் சத்திரிய குலத்தைச் சேர்ந்தவர்களே பந்தளம் இராஜாக்கள். பந்தளம் இராஜாக்களை தென்காசி பாண்டிய மரபோடு தொடர்பு படுத்துவது உண்டு, எனவே இந்த ஏறாடி இராஜாக்கள் தெளிவாக பாண்டிய மரபோடு அதாவது

பூர்வீக சத்திரிய குலத்தோடு தொடர்புடையவர்களாகவே இருக்க வேண்டும், கேரளத்தில் பலகாலம் வாழ நேர்ந்ததால், நம்பூதிரிகளின் வாழ்வியல் சட்டங்களையும் கேரள சமூக அமைப்பின் சில கூறுகளையும் ஏற்று தங்கள் அடையாளங்களை விட்டுக் கொடுத்து ஒரு மன சமாதானத்திற்கு வந்த விட்டதாகத் தெரிகிறது. மற்றபடி, 'ஏறாடி' என்ற இந்தப் பிரிவினர் பூர்வீக சத்திரிய குலத்தினராகவே அதாவது பழைய சான்றோர் குலத்தினராகத்தான் இருக்க முடியும். எனவேதான் அவர்கள் தங்களை நாயர்களிடமிருந்து வேறு படுத்திக்காட்ட ஏறாடி, அடியோடி, நெடுங்காடி என்று தங்களை அழைத்துக் கொண்டனர்.

இலங்கை அரச வம்சத்திலும் கூட 'ஏளாறா' என்ற பெயர் வருகிறது. இவ்வரச வம்சத்தினரை 'எல்லாளன்' என்பது பொருத்தமாக இல்லை, 'ஏறாளன்' என்ற சொல்லின் திரிபாகவே இதுவும் இருக்க வேண்டும்.

பாலி மொழியில் எழுதப்பட்ட இலங்கையின் பூர்வீக புத்த மத நூலாகிய மகாவம்சம் என்ற, நூலில், கி.மு இரண்டாம் நூற்றாண்டில் இலங்கையை ஆண்ட 'ஏறாளன்' பற்றிய குறிப்புகள் உள்ளது. 'சோழ ரெட்ட இதாகம்மோ, ரஜ்ஜதம் இஜ் ஜாதிகோ தமிளோ ஏளாறா நாம்நோ' என்ற வாசகம் காணப்படுகிறது.

இதில் ' சோழ ரெட்ட இதாகம்மோ ' என்பதற்கு 'சோழநாட்டிலிருந்து இங்கு வந்த' என்று பொருள் , ரஜ்ஜதம் இஜ் ஜாதிகோ தமிளோ ஏளாறா நாம்நோ', என்றால் 'ரஜ்ஜதம் ' என்ற சாதியைச் சேர்ந்த தமிழன் ஏறாளன் என்ற பெயரை உடையவன் என்று பொருள். 'ரஜ்ஜத' என்பதை 'ராஜ' என்றும் நேரடி பொருளில் ஏற்கலாம். அல்லது 'ரஜ்ஜத ' என்றால் பொன், வெள்ளி போன்ற உலோகங்களைக் குறிக்கும் (வேள் என்ற சொல்லும் கூட வெள்ளி என்ற வேர்ச் சொல்லிலிருந்த வந்திருக்கலாம்) 'வெள் ' அல்லது வெளிச்சம் என்பது மன்னர்களுக்கு உரியது என்ற பொருளினாலும் வழங்கப்பட்டிருக் கலாம், எப்படிப் பார்த்தாலும் ' ரஜ்ஜதம் இஜ் ஜாதிகோ ' என்பதால் ' ரஜ்ஜதம் ' ஒரு சாதிப் பெயராகவே இருந்திருக்கிறது. அது அரச குலத்தையே குறித்தது. பிரபுவர்க்கம் என்றும் இதை சிங்களத்தில் மொழி பெயர்த்திருக்கிறார்கள். வில்லியம் பேஜி என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததை, சிங்களத்தில் மொழிபெயர்க்கும் போது பிரபு வர்க்கம் என்றே மொழிபெயர்த்திருக்கின்றனர்.

பந்தள அரச வம்சம் கூட தென்காசிப் பாண்டியர்களின் ஒரு கிளையாகச் சொல்லப்படுவது இங்கு குறிப்பிட்டு நோக்கத் தக்கது. பந்தளம் இராஜாக்களுக்கு, திருவிதாங்கூர் நாயர் அரச வம்சத்துடன் எந்தத் தொடர்பும் இல்லை. அவர்கள் ஒரு தனிப் பிரிவாகவே இருக்கின்றனர். இவை எல்லாவற்றையும் சேர்த்து நோக்கும் போது இந்த ஏறாடி இராஜாக்கள் பூர்வீக சான்றோர் குல சத்திரியர்களே என்பது தெளிவாகத் தெரிகிறது.

'ஏறாளன்,' 'ஏறாடி' என்பவையெல்லாம் மிகப் பழமையான தமிழ்ச் சொற்கள். இந்தத் தமிழ் மரபு, தமிழ் நாட்டில் மறைந்து விட்டாலும், கேரளத்தில் அது சிறு ஜாதிப் பிரிவாக இன்றும் உயிர்ப்புடன் இருக்கிறது.

எஸ். இராமச் சந்திரன்
கல்வெட்டாய்வாளர், சென்னை.

வாழத் தெரியாதவர்களே பிறரை இகழ்கிறார்கள்.